

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல். .ஏ., கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மு.தினேஷ்குமார் மற்றும் பலர் உள்ளனர்.



கோவை காமராஜர் சாலை, அலோஃப்ட் ஹோட்டல் அருகில் விவேகானந்தா நகர், சிவா நகர், இந்திரா கார்டன் பகுதிகளில் சாக்கடை வசதிகளை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் அவற்றை சரி செய்யுமாறு கூறினார். இதில் நீலிக்கோணாம்பாளையம் பகுதி பொறுப்பாளர் ப.அன்பழகன், 54 வது வட்டக் கழகச் செயலாளர் கே.ஆனந்தகுமார், கொ.ம.தே.க. மாவட்டச் செயலாளர் கோவை தனபால் உள்பட கழக நிர்வாகிகள், நகர்நலச் சங்கங்களின் நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் உடனிருந்தனர்.

### இராமநாதபுரம் பெருங்குடி – வடக்கன்குளம் கிராமத்தில்

# கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதிஉதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

*சென்னை, ஜுலை 12-*

*திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெருங்குடி பகுதி-1 கிராமம், வடக்கன்குளம் குழந்தைகள் இல்லத்திலுள்ள கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி-முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*

*இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:*

*தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மாறாந்தை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் - திருமதி. ராமலெட்சுமி தம்பதியரின் மகன் செல்வன். சேர்மதுரை (வயது 12) என்பவர் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பெருங்குடி பகுதி-1 கிராமம், வடக்கன் குளம் CMS குழந்தைகள் இல்லத்தில் தங்கி அருகிலுள்ள கன் கார்டியா மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு பயின்றுவந்த நிலையில் கடந்த 8.7.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் CMS குழந்தைகள் இல்ல வளாகத்தில் பயன்பாட்டில் உள்ள கிணற்றில் எதிர்பாராத விதமாக தவறி விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.*

*மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.*

### கரூரில் – முதல் வாக்குச் சாவடி நிர்வாகிகள் கூட்டம்!

# கலைஞர் முதலில் வென்ற குளித்தலை தொகுதியில் இருந்து நமது வெற்றிப் பயணத்தை தொடங்குவோம்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!

கரூர்.ஜுலை.12–

50 விழுக்காடு புதிய உறுப்பினர்களை கழகத்தில் இணைத்து, பட்டியலை ஒப்படைப்போம் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கரூரில் நடைபெற்ற முதல் வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேசினார்.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில், கரூர் மாவட்ட வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டம் கரூர் ராயனூர் தளபதி திடலில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக வாக்குச்சாவடி முகவர்கள் (பிஎல்ஏ.2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (பி.டி.ஏ), பூத் இளைஞர் அணியினர், பூத் மகளிர் அணி, பூத் கமிட்டி நிர்வாகிகள் (பி.எல்.சி) என 16000 பூத் கமிட்டி நிர்வாகிகள் பங்குபெற்ற மாபெரும் வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேசியதாவது

மூன்று தினங்களுக்கு முன்னர் துணை முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி கேட்டு கரூர் மாவட்டத்திலுள்ள 1055 வாக்குச்சாவடிகளிலும் பூத் நிர்வாகிகள் சுமார் 16,000 பேர் பங்கேற்கின்ற கூட்டத்தில் உரையாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டதன் பேரில் வருகை தந்த துணை முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக நின்று வென்ற தொகுதி குளித்தலை. அந்த தொகுதி இடம் பெற்ற கரூர் மாவட்டத்தில் இருந்து பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தொடங்கப்பட்டு இருக்கின்றது. இதனை வெற்றிப்பயணமாக மாற்றிட கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின், வழியில் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், துணை முதலமைச்சர் அவர்களுடைய கரங்களில், மேற்கு மண்டலத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் மகத்தான வெற்றி பெற்று வெற்றிக்கனியை சமர்ப்பிப்போம்.

1ஆம் தேதி தலைவர் அவர்கள், ஓரணியில் தமிழ்நாடு என்கிற மாபெரும் முன்னெடுப்பினை தொடங்கி வைக்க, 3ம் தேதி புதிய உறுப்பினர் சேர்ப்பு பணிகளை தொடங்கினோம். ஏறத்தாழ ஆறு நாட்களில் கரூர் மாவட்டத்தில் இடம் பெற்றிருக்கக்கூடிய, நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும், முதல் இடத்தை பெறக்கூடிய அளவிற்கு அதிகமான உறுப்பினர்களை சேர்த்து கொடுத்த அனைத்து பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கும், செயலாளர்கள் அனைவருக்கும், மாவட்ட கழகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேதிநகர் பகுதியில்

650 வாக்காளர்களில் 550பேரை கழக உறுப்பினர்களாக சேர்த்து சிறப்பான பணியினை நமது நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே நமது தலைவர் அவர்கள் 30 விழுக்காடு என இலக்கு நிர்ணயித்தபோது, நிர்வாகிகளுடன் கலந்து பேசி மேற்கு மாவட்டங்களில் 40 விழுக்காடு என்கின்ற அளவிற்கு, புதிய உறுப்பினர்களை சேர்க்க முயற்சி செய்வோம் என்கிற பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். நிச்சயம் நாம் அனைவரும் முயற்சி செய்தால் 50 விழுக்காடுகளுக்கு மேல் புதிய உறுப்பினர்களை சேர்க்க முடியும். இப்பணிகளை சிறப்பாக மேற்கொண்டு அதனை நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களது கரங்களில் ஒப்படைப்போம் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

234 தொகுதிகளிலும் முதல் 10 இடங்கள் பட்டியலில் கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளும் இடம்பெற்றது என்கிற நிலையை, அனைவரையும் ஒருங்கிணைத்து செயலாற்றி உருவாக்க வேண்டும். 2021 சட்டமன்ற தேர்தலின்போது நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த நான்கு வேட்பாளர்களும் உதயசூரியன் சின்னத்தில் வெற்றி பெற கரூர் மாவட்ட மக்கள் மகத்தான ஆதரவினை அளித்தனர். அதே போல் 2026 சட்டமன்ற தேர்தலிலும், நான்கு தொகுதிகளிலும் உதயசூரியனை வெற்றி பெறச்செய்து உங்களது கரங்களில் ஒப்படைப்போம் என்கிற உறுதியை தெரிவித்துக் கொள்கின்றோம். கரூர் மாவட்ட மக்களுக்கு பல்வேறு அரசு நலத் திட்டங்களை ரூ. 3 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், அளித்துள்ளார்கள். இதற்காக முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்களுக்கு, நாம் செலுத்துகின்ற நன்றிக்கடனாக நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் உதயசூரியன் வென்றது என்கிற வரலாற்றுச் சாதனையை உருவாக்கிட வேண்டும்.

மேற்கு மாவட்டத்தின் வெற்றிப் பயணம் என்பது குளித்தலையில் இருந்து தொடங்கியது, நாம் முழுமையாக வெற்றி பெற்றோம் என்கின்ற நிலை அமைந்திட வேண்டும். எனவே அனைவருக்கும் அன்பான வேண்டுகோளாக வைக்கிறேன். தலைவர் அவர்கள் 40 நாட்கள் என அவகாசம் வழங்கியுள்ளார்கள். 20 நாட்களில் முடிக்க வேண்டும் என பயணத்தை தொடங்கி இருக்கிறோம். அதற்கும் முன்னதாகவே பணிகளை முடித்திட சிறப்பு கவனம் செலுத்திட வேண்டும் என அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இயக்கத்தின் ஆணிவேராக, எந்த தேர்தல் களம் வந்தாலும் வாக்காளர்களை சந்தித்து வாக்கு சாவடிக்கு அழைத்துச் சென்று உதயசூரியனுக்கு வாக்குகளாக மாற்றி வெற்றி வாகை சூடுவதற்கு அடித்தளமிடுகின்ற வாக்குச்சாவடி நிர்வாகிகளுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்

### நாமக்கல் மாவட்டத்தில்

# 2099 பயனாளிகளுக்கு ரூ. 40.86 கோடியில் நல உதவிகள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

நாமக்கல், ஜுலை 12-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 11.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 39 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 89.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 141 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 2,099 பயனாளிகளுக்கு 40.86 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த விழாவில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 40.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கீரம்பூர் வருவாய் ஆய்வாளர் அலுவலக கட்டடம், பதிவுத்துறையின் சார்பில் 1.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மல்லசமுத்திரம் சார்பதிவாளர் அலுவலகக் கட்டடம், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 1.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தத்தாதிரிபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 4 கூடுதல் வகுப்பறை கட்டடம் மற்றும் 1 அறிவியல் ஆய்வகக் கட்டடம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தலா 15.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓ.சௌதாபுரம், கல்லாங்குளம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்தா மருத்துவ கட்டடங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 6.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேளாண்மை பொருட்கள் சேகரிப்பு மையம், அங்கன்வாடி மையம், உணவு தானிய கிடங்கு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க கட்டடம், மகளிர் சுய உதவி குழு கட்டடம், ஊராட்சி செயலர் அலுவலகம், துணை சுகாதார நிலைய கட்டடம், பேரூராட்சிகள் துறையின் சார்பில் 77.25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாண்டமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வகத்துடன் கூடிய வகுப்பறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆவாரங்காடு நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் 32.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக இரண்டு வகுப்பறை கட்டடங்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் கொல்லிமலை வட்டாரம், வாழவந்திநாடு ஊராட்சியில் 10.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதி அங்காடி கட்டடம் என மொத்தம் 11.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 39 முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், அயோத்திதாசர் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம், குழந்தைநேயப் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், நபார்டு திட்டம், இலங்கைத் தமிழர் நலன் திட்டங்களின் கீழ் 57.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 111 பணிகளுக்கும், வேளாண்மைத்துறையின் சார்பில் 3.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை வேளாண்மை விரிவாக்க மையம், புதிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் உள்ளிட்ட 2 பணிகளுக்கும், பேரூராட்சிகள் துறையின் சார்பில் 25.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், தார் சாலை, அறிவுசார் மைய கட்டடம் உள்ளிட்ட 25 பணிகளுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம், கிராம அறிவுசார் மைய கட்டடம் ஆகிய 3 பணிகளுக்கும் என மொத்தம் 89.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 141 பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 45 மாற்றுத்திறனாளிகளுக்கு 35.38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், திறன்பேசி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், ஆவின் பாலகம் அமைக்க மானிய உதவித் தொகையினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 1,691 பயனாளிகளுக்கு 23.94 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு வரன்முறை திட்டத்தில் நகர்புற வீட்டுமனை பட்டாக்கள், இ பட்டா, விலையில்லா வீட்டு மனை பட்டாக்களையும், மாவட்ட தொழில் மையம் சார்பில் 2 பயனாளிகளுக்கு 9.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவியினையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 24 பயனாளிகளுக்கு 65.40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆட்டோக்கள் வாங்குவதற்கான மானியம், வீட்டுவசதி திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்பு ஆணை மற்றும் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 119 பயனாளிகளுக்கு 11.77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா சலவைப்பெட்டி, விலையில்லா தையல் இயந்திரம், முஸ்லீம் முகளிர் உதவும் சங்கம் சார்பில் நலிந்தோர் நல உதவிகள், சீர்மரபினருக்கான நலவாரிய அடையாள அட்டை, கிறிஸ்துவ நல வாரிய அடையாள அட்டை, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 90 பயனாளிகளுக்கு 52.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளையும், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு 31.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான ஆணைகளையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டாக்களையும், தாட்கோ துறையின் சார்பில் 45 பயனாளிகளுக்கு 54.90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கண் கண்ணாடி, பட்டப்படிப்பு, தொழில்நுட்ப படிப்பு, மேல் நிலை படிப்பு, திருமணம் உதவித் தொகை, சுமை வாகனம், சுற்றுலா வாகனம், கறவை மாடு வாங்க மானியம், இலவச துரித மின் இணைப்பு ஆகிய நலத் திட்ட உதவிகளையும், கூட்டுறவுத்துறையின் சார்பில் 69 பயனாளிகளுக்கு 32.26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும் என இவ்விழாவில் மொத்தம் 2,099 பயனாளிகளுக்கு 40.86 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வி.எஸ்.மாதேஸ்வரன், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கு.பொன்னுசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சு.வடிவேல், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



“ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பை வீடு வீடாகக் கொண்டு செல்லும் வகையில் கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி, கவுண்டம்பாளையம் பகுதி, வார்டு எண் : 16, சிவா நகர், டிவிஎஸ் நகர், பூத் எண் : 240 பகுதியில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் கவுண்டம்பாளையம் பகுதி பொறுப்பாளர் ஜெ.எஸ்.சரத் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். இதில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, துணை செயலாளர் வி.ஜி. கோகுல், வட்டக் கழக செயலாளர் ரமணன் உள்பட பாக முகவர்கள் (BLA2), BDA, இளைஞர் அணி, மகளிர் அணி, கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 37, காலேஜ் ரோடு, எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் எதிர்பாராத விதமாக சிலிண்டர்கள் வெடித்த விபத்தில் வட மாநிலத்தவர்கள் தங்கியிருந்த தகர கொட்டகை வீடுகள் இடிந்து தரைமட்டமானது. தகவல் அறிந்ததும் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் நேரில் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட 27 குடும்பங்களுக்கு தனது சொந்த நிதியில் இருந்து தலா ரூ.10 ஆயிரம் வீதம் (27x10,000) 2,70,000 (இரண்டு லட்சத்து 70 ஆயிரம்) வழங்கினார். உடன் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், மாநகராட்சி துணை மேயர் இரா. பாலசுப்பிரமணியம், அண்ணா நகர் பகுதி செயலாளர் மின்னல் அ.நாகராஜன், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ம.சூர்யா, வட்டக் கழக செயலாளர் ராம்குமார் உள்பட பலர் உள்ளனர்.